## ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்கள்


சிமெண்ட் தொட்டிகள்


தண்ணீர்த் தொட்டி


ஆட்டுக்கல்


பிளாஸ்டிக் தட்டுகள், கப்புகள்


தேங்காய் ஓடுகள்


வாளி


டயர்கள்


திறந்த கிணறு

### டெங்கு காய்ச்சலைத் தடுக்க.......

ஏடிஸ் கொசு உருவாகும் தேவையற்ற பொருட்களை அகற்றிடுவோம்.

தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை வாரம் ஒருமுறை பிளீச்சிங் பவுடர் கொண்டு நன்றாகத் தேய்த்து கழுவி கொசு புகாதவாறு மூடி வைப்போம்.

பகலிலும் சிறு குழந்தைகளை கொசு வலைக்குள் தூங்க வைப்போம்.

டெங்கு காய்ச்சலை தவிர்ப்போம்.

### கூடுதல் தகவல்களுக்கு ☎ 104

**உங்கள் பகுதியில் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக பொது சுகாதாரத் துறையின் 24x7 மணி நேர கட்டுப்பாட்டு மையத்தை தொடர்பு கொள்ளலாம். குறுஞ்செய்தியாகவும் தெரியப்படுத்தலாம்.**

**தொலைபேசி : 044-24350496 / 044-24334811**
**கைபேசி : 9444340496 / 9361482899**

திட்ட இயக்குநர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
தேனி

மாவட்ட ஆட்சித்தலைவர்
தேனி

**வீட்டிற்கொரு கழிப்பறை அமைத்திடுவோம் ! வீதியில் மலம் கழிப்பதை தடுத்திடுவோம் !**



## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை & மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை



**ஏடிஸ் கொசுக்களை ஒழிப்போம் !**
**டெங்கு காய்ச்சல் வராமல் தடுப்போம் !**



### 1. டெங்கு காய்ச்சல் என்றால் என்ன?

இது டெங்கு வைரஸ் கிருமியால் ஏற்படும் ஒரு வகை காய்ச்சல் ஆகும்.

### 2. டெங்கு காய்ச்சல் எப்படிப் பரவுகிறது?

- டயர், பயன்படுத்தாத உடைந்த சிமெண்ட் தொட்டிகள், நீண்ட காலமாக கழுவப்படாத தொட்டிகள் போன்றவற்றில் தேங்கும் நீரில் உருவாகும் ஏடிஸ் கொசுக்கள் டெங்கு வைரசுடன் உருவாகிறது. இந்த கொசுக்கள் கடிக்கும் போது டெங்கு காய்ச்சல் ஏற்படுகிறது.
- டெங்கு காய்ச்சல் உள்ளவரை கடித்த ஏடிஸ் கொசு ஆரோக்கியமானவர்களை கடிக்கும் பொழுது ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவுகிறது.

- ஏடிஸ் கொசு மூன்று வாரங்கள் உயிர் வாழும்.
- இந்த மூன்று வார காலத்தில் ஒரு கொசு நல்ல நீரில் நூற்றுக்கணக்கான முட்டைகளிட்டு இனப்பெருக்கம் செய்கிறது.
- இவ்வாறு குறுகிய காலத்தில் பல்லாயிரக்கணக்கான கொசுக்கள் உருவாகின்றன.
- ஏடிஸ் கொசு பட்டப் பகலில் தந்திரமாக மனிதர்களை கடிக்கும் தன்மையுடையது.

### 3. டெங்கு காய்ச்சல் எப்படி பரவாது?

தண்ணீர், காற்று, எச்சில், இருமல், தும்மல் மற்றும் தொடுதல் மூலமாக ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவாது.

## 4. டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் யாவை?

காய்ச்சல், சோர்வு, தலைவலி, உடல் வலி, வாந்தி, எலும்பு வலி ஆகியவை இந்த நோயின் முக்கியமான அறிகுறிகள் ஆகும்.



காய்ச்சல் | தலைவலி | உடல் வலி | சிவந்த தடிப்புகள் | குமட்டல்/ வாந்தி

- இரத்தத் தட்டு அணுக்கள் இரத்தம் உறைவதற்கு மிக முக்கியமான காரணியாகும். டெங்கு வைரஸ் இரத்தத் தட்டு அணுக்களை அழித்துவிடும் தன்மையுடையது.
- இரத்தத் தட்டுக்கள் எண்ணிக்கை குறையும்போது, அது நுரையீரல், வயிறு போன்ற உறுப்புகளிலும், பல் ஈறு, சிறுநீர்ப் பாதையிலும் இரத்தக் கசிவை ஏற்படுத்தக்கூடும்.
- உரிய மருத்துவ சிகிச்சை கிடைக்கவில்லை எனில் உயிர் இழப்புகூட நேரிடலாம்.

## 5. காய்ச்சலை ஏன் உடனடியாக கவனிக்க வேண்டும்?

- சாதாரணமாக ஏற்படும் சளி, காய்ச்சல் தானாகவே ஓரிரு நாட்களில் குணமாகிவிடும். ஆனால் மலேரியா காய்ச்சல், எலி காய்ச்சல், டெங்கு காய்ச்சல், டைபாய்டு காய்ச்சல் போன்ற காய்ச்சல்களுக்கு, உரிய மருத்துவ சிகிச்சை பெற வேண்டும். மருத்துவ சிகிச்சை தாமதமானாலோ சுயமாக மருந்துகள் சாப்பிட்டாலோ போலி மருத்துவரிடம் சிகிச்சை பெற்றாலோ உடல் நலம் கடுமையான பாதிப்புக்குள்ளாக நேரிடும்.
- எனவே, காய்ச்சல் கண்டவுடன் மருத்துவரிடம் சென்று முறையான சிகிச்சை பெறுவது மிக முக்கியமானதாகும். மேலும் மருத்துவரின் ஆலோசனைப்படி இரத்த பரிசோதனைகள் செய்து கொள்ள வேண்டும்.

**நினைவில் கொள்வீர்!**
**காய்ச்சலின் போது தேவையற்ற ஊசிகள் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கலாம்**



## 6. டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு கவனித்துக் கொள்வது?

- உரிய சிகிச்சையும் முறையான கவனிப்பும் கொடுத்தால் டெங்கு காய்ச்சலை எளிதாக குணப்படுத்தலாம்.
- காய்ச்சலுக்கு மருத்துவர்கள் கொடுக்கும் மருந்துகளை உரிய நேரத்தில் சாப்பிட வேண்டும்.
- டெங்கு காய்ச்சல் உடலில் நீர்ச் சத்தைக் குறைத்துவிடும். உப்பு சேர்த்த கஞ்சி, இளநீர் மற்றும் மருத்துவமனையில் கொடுக்கப்படும் உயிர்காக்கும் ஓ.ஆர்.எஸ் போன்ற நீராகாரம் தேவையான அளவு கொடுக்க வேண்டும்.
- காய்ச்சல் குறையவில்லையென்றால் பருத்தியால் நெய்யப்பட்ட சிறிய துண்டை சாதாரண வெப்பநிலையில் உள்ள தண்ணீரில் நனைத்து பிழிந்து ஈர துண்டின் மூலம் நெற்றி, கழுத்து, அக்குள், நெஞ்சு, வயிறு ஆகிய இடங்களில் துடைத்துவிட்டால் காய்ச்சல் குறையும். இதற்கு ஐஸ்கட்டியோ அல்லது மிகவும் குளிர்ந்த நீரையோ பயன்படுத்தக் கூடாது.
- மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்க மருத்துவ ஆலோசனை வழங்கினால் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டும்.
- காய்ச்சல் நின்ற பிறகு மூன்று நாட்களுக்கு மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பசி எடுக்கவில்லையென்றாலோ சோர்வாக இருந்தாலோ மீண்டும் மருத்துவரிடம் காட்ட வேண்டும்.

**டெங்கு காய்ச்சலை குணப்படுத்தவும், தடுக்கவும் நிலவேம்பு குடிநீர், மலைவேம்பு இலைச்சாறு மற்றும் பப்பாளி இலைச்சாறு ஆகிய சித்த மருந்துகளை பயன்படுத்தலாம்.**





## 7. டெங்கு காய்ச்சலைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும்?

- டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசு சுத்தமான நீரில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கிறது. இது முட்டையிலிருந்து லார்வா, பியூப்பா என உருமாறி பத்து நாட்களில் கொசுவாக உற்பத்தியாகிறது.
- ஏடிஸ் கொசு உருவாகும் இடங்களை அழித்து, வீடு, பள்ளி, பொது இடங்கள் மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொண்டால் மட்டுமே டெங்கு காய்ச்சலை தடுக்க முடியும்.